விரும்புகிறாரோ, அந்த இடத்தில் பால் உற்பத்தி உயர்ந்து, தேவை ஏற்படின் மொத்த பால் குளிர்விப்பான் அல்லது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**157—**

**தடுப்பணை**

***6642—திரு. வி. சோமசுந்தரம்:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேட்டில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், பாலாற்றில் செவிலிமேடு அருகில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்வியினை இங்கே எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களில் நீர்வளத்தைப் பெருக்க வேண்டும் என்றும், தமிழகம் அண்டை மாநிலத்தை நம்பியிருக்கின்ற காரணத்தினாலே, பல்வேறு வகைகளிலே நாம் மழை நீரைச் சேமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டதின்பெயரில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்தக் கோரிக்கை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

*முற்பகல் 10-40*

**திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்தர்களுடைய காலம் பொற்காலம் என்று வரலாற்றிலே படித்திருக்கின்றோம். ஆனால், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலம்தான் தமிழகத்தினுடைய பொற்காலம் என்று கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம், இந்த அவையிலே காஞ்சிபுரத்திலே இரண்டு இடங்களில் 22.70 ஏக்கர் நிலத்திலே 1,500 அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் 32 மேம்படுத்தப்பட்ட மனைகள் 303 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே செயல்படுத்தப்படும் என்று அறிவித்த வாழும் வரலாறாக விளங்கிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு தொகுதி மக்களுடைய சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

*காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட, பெரும்பாக்கம், விசார், விப்பேடு, நரப்பாக்கம், வெங்கடாபுரம், செவிலிமேடு போன்ற பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் தொழில் செய்வதற்கும், நிலத்தடி நீர்மட்டம் உயருவதற்கும், குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் வகையிலே, பாலாற்றின் குறுக்கே செவிலிமேடு பகுதியிலே தடுப்பணை கட்ட ஆவன செய்யப்படும் என்று கூறிய பதிலுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**158—**

### கால்நடை மருத்துவமனை

***5599—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*